# தி.மு.க.வின் பவளவிழா நிறைவு ஆண்டு:

# ஒரு பண்பாட்டு அரசியல் இயக்கத்தின் நெடும் பயணம் 1

தி.மு.க. தோன்றி 75 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன. முக்கால் நூற்றாண்டு அது அரசியல் களத்தில் நின்று வாளையும் கேடயத்தையும் இன்னமும் சுழற்றிக் கொண்டு இருக்கிறது. போராட்டம் தொடருகிறது; முடிந்தபாடில்லை. அது முடியாது. இது 'திராவிட' இயக்கவியல்.

திராவிட இயக்கம் உருவாகி 112 ஆண்டுகள் ஆகிவிட்டது. ஒரு நூற்றாண்டைக் கடந்து விட்டது. காலம் கடுகி ஓடுவதை **'நாளென ஒன்றுபோல் காட்டி'** எனக் காலத்தை அலகிடும் திருக்குறள். அப்படி ஒடிய காலத்தினூடேதான் தி.மு.கழகம் பவளவிழாக் காணுகிறது.

எங்கே தொடங்குவது? எங்கே முடிப்பது? எதை எழுதுவது? எதை எழுதாமல் இருப்பது? ஆடையிலே - விளையாடையிலே எம்முள் உள்ளொளியாய் கிளர்ச்சியூட்டிய உணர்வல்லவா, தி.மு.க.!

எம்மைப் போல் அப்போது தமிழகத்தின் ஒவ்வொரு ஊரில் இருந்த இளைஞர்களின் உள்ளத்திலும் **'வானத்திலே மயிலாட'** செய்த கழகமல்லவா-தி.மு.கழகம்!

புதுக்கடையைத் திறப்பது போல் 'மழைக் காளானாய்' முளைத்த கட்சி அல்லவே கழகம்!

**தி.மு.கழகம் சூன்யத்திலிருந்து உருவாகிவிடவில்லை. அது சிந்து சமவெளி நாகரிகத்தின் தொடர்ச்சி, இயக்கமாய், கட்சியாய், நம் அரசியல் உரிமையைக் காக்கின்ற காவல்காரனாய் பணியாற்றுகிறது.**

**13ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு ஐநூறு ஆண்டுகளாய் காணாமல் மறைந்து உறைந்து கிடந்த இனத்தை, மொழியைப் பிரான்சிஸ் ஒயிட் எல்லீசும், இராபர்ட் கால்டுவெல்லும் 'சிக்கிமுக்கி' கல்லைத் தேய்த்து தீயை உண்டாக்கிக் கொடுத்தனர். அந்த 'ஆதித் தீ' பைய எரியத் தொடங்கி இன்று வீட்டு விளக்காய் ஒளிர்கிறது. அதுதான் தி.மு.க.! தமிழர்களின் வாழ்வில் சமூக, பொருளாதார, அரசியல் களத்தில் நிற்கிறது.**

**திராவிட இயக்கத்தின் அரசியல் சார்பை வெளிப்படுத்த தோற்றுவிக்கப்பட்ட கட்சி தி.மு.க.! ஐந்தாறு மாத சிந்தனைக்குப் பிறகு - செப்.17,18/1949-இல் அறிஞர் அண்ணாவால் நிறுவப்பட்ட கட்சி தி.மு.க.!**

தாய்க் கழகத்தின் கொடி மற்றும் நிறத்தை எடுத்துக் கொண்டது தி.மு.க.! தொண்டன் எளிதில் தைத்துப் பறக்க விடும்படியான (3:2 விகிதத்தில் அளவு வைத்து)

கருப்பு - சிவப்பு வண்ணக் கொடி - தி.மு.கழகக் கொடி. இந்தக் கொடி தி.மு.க.வின் முதற் கூட்டத்தில்-தொடக்க நாள் கூட்டத்தில் பறந்தது.

செப்.17 ஆம் தேதி அமைக்கப்பட்ட கழகத் துணைக் குழுக்கள் தம்முள் வேலைப் பகிர்வைச் செய்து கொண்டன. அமைப்புத் திட்டக்குழு அறிஞர் அண்ணாவைப் பொதுச்செயலாளராக நியமித்தது.

சட்டத்திட்டக் குழு அதன் அறிக்கையை இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு வழங்கியது. அதன் மீது 1951-ஆம் ஆண்டு மதுரைப் பொதுக்குழுவில் பலத்த விவாதங்களுக்கிடையே, திருத்தங்கள் நடந்தன. பின்னர் கழகச் சட்டத்திட்டங்கள் மற்றும் கொள்கை, குறிக்கோள்கள் ஏற்கப்பட்டன. அது ஒரு சிறு புத்தகமாக வெளியிடப்பட்டது.

மெல்ல கழகம் வளர்ந்தது. திராவிடர் தேநீர் நிலையம், அழகு நிலையம், மிதி வண்டிக் கடை எங்கும் கழகம்! நெடுஞ்சாலைகளில் பேருந்தில் சென்றால் மரங்கள், கட்டடங்கள், குடில்கள் எங்கும் கழகக்கொடி.

ஊர்க்கிளை முதல் தலைமைக் கழகம் வரை பலமான அமைப்பு. சார்பு மன்றங்கள், படிப்பகங்கள், என தன்னெழுச்சியான அடிப்படை அமைப்புகள். அதற்குள்ளே படிக்க அறிவு தரும் இனிய நூல்கள், ஏடுகள்-இதழ்கள்! ஞாயிறுதோறும் சொற்பயிற்சி கூட்டங்கள்.

அறிஞர் அண்ணாவின் முயற்சியில் 'அறிவகம்' இயங்கத் தொடங்கியது. கலைஞரால் 'அன்பகம்' வாங்கப்பட்டது. அறிவகத்தை குமரி மாவட்டக் கழகத் தோழர் வி.ஜே.ஜான் 1951 இல் திறந்து வைத்தார். அன்பகத்தை அறிஞர் அண்ணா 1964 இல் திறந்து வைத்தார்.

1953 ஜூன் 15 முதல் தி.மு.க.வின் அதிகாரப்பூர்வமான நாளேடு 'நம்நாடு' வெளிவரத் தொடங்கிற்று. தி.மு.கழகம் ஒரு முழு அரசியல் கட்சிக்குரிய தோற்றத்தை அமைப்பு வழி வழங்கத் தொடங்கிவிட்டது.

கழகம் பிறந்த சில மாதங்களுக்குள்ளேயே மாவட்ட மாநாடுகள் நடக்கத் தொடங்கி விட்டன. பின்னர் அவை மாநில மாநாடுகள் நடத்த முன்னெடுத்துச் செல்லப்பட்டன. பொதுமக்கள், கழகத்தினர், ஆதரவாளர்கள் என அனைவரும் மாநாடு என்றால் 'மாபெரும் மக்கள் திரள் தான்' எனப் புதுப் பொருளை வழங்கினர்.

பொதுமேடையிலே பேச்சுக் கலை வளர்ந்தது. அதனை அறிஞர் அண்ணா 'மாலை நேர வகுப்புகள்' என அழைத்தார். தலைவர்கள் முதல் தொண்டர்கள் வரை நாடகங்கள் எழுதினர், நடித்தனர். திரைப்படத் துறை கழக வசமாயிற்று,

**தி.மு.கழகத்தினர் நல்ல தமிழ் பெயர்களைச் சூட்டிக் கொண்டனர். கைத்தறி ஆடைகளைத் தரித்தனர். தோளுக்குத் துண்டை அணிந்தனர். பழைய கலாச்சாரத்தை மீட்டெடுத்தனர். என்றுமுள தென்றமிழ் எதிலும் எங்கும் இனிமையாய் ஒலித்தது. காதினில் தேனாய் பாய்ந்தது. எல்லாத் தொடக்கமும் தொடர்ச்சியாயின.**

**வீடுகளில் பிறப்பு முதல் இறப்பு வரையான நிகழ்ச்சிகளின் போக்குகளில் கழகத்தால் ஒரு மாறுதல் உண்டாயிற்று. அது கலாச்சாரப் புரட்சியாய் மலர்ந்தது. தமிழமாய் உயர்ந்தது. அது மொழி, இனம், நாடு எனச் செழுமையாயிற்று.**

தி.மு.கழக நிறுவனர் அறிஞர் அண்ணா அறிவுக்கு முதலிடம் வழங்கச் சொல்லி வற்புறுத்தியவர். நடந்து காட்டியவர், கலைஞர் எழுப்பிய 'அண்ணா அறிவாலயம்' கம்பீரமாக இன்று நிற்கக் காண்கின்றோம். இது தி.மு.க.வின் 'செக்ரட்டேரியட்'

'அறிவாலயம்' எனும் சொல்லை அண்ணா 1946-லேயே அறிமுகப்படுத்தினார். 23.01.1948 திராவிட நாடு இதழில் உலகின் மிகப் பெரிய நூலகத்தை 'அறிவாலயம்' எனத் தலைப்பிட்டு சிறிய கட்டுரை ஒன்றை எழுதினார். அதே பெயரைக் கொண்டு கலைஞரால் 'அறிவாலயம்' தி.மு.கழகமாய் நிற்கிறது. அதற்குப் பவள விழா நிறைவு!

தி.மு.கழகம் தமிழகம் எங்கும் பரவியது. மக்கள் கழகத்தைப் பற்றிப் பேசினர். தி.மு.கழகத் தலைவர்களின் பேச்சை இசைபோல கேட்டனர். வளர்ந்தது கழகம். 1952 பொதுத்தேர்தலில் கழகம் பிற கட்சிக்கு ஆதரவு அளித்து வெள்ளோட்டம் பார்த்தது. வாய்ப்பு வெற்றியை நோக்கியதாய் இருந்தது.

திகைத்தனர் பிற கட்சியினர்! வெட்ட வெளியில் என்ன பேச்சு? கோட்டைக்கு உங்களால் வர முடியுமா? என எக்காளம் கொட்டிச் சிரித்தனர். 1956-இல் மாநாட்டில் தேர்தலுக்கு நிற்க கழகம் மக்களிடம் அனுமதி பெற்றது.

1957முதல் கழகம் சட்டமன்றம், நாடாளுமன்றம் நுழையத் தொடங்கியது. 1959-இல் சென்னை மாநகராட்சியைப் பிடித்தது.

இதே ஆண்டு அறிஞர் அண்ணாவுக்குப் பொன் விழா பிறந்தநாள் ஆண்டு. அண்ணாவின் வாழ்க்கையிலிருந்து ஆண்டுக்கு ஒரு காட்சி வீதம் 50 டிரக்குகளைக் கொண்ட ஓவியங்கள் அவற்றில் அமைக்கப்பட்டன. அவை கடற்கரைக் கூட்டத்திற்குப் பேரணியாகச் சென்றன.

இயக்க முன்னோடிகள் வழி 1949 முதல் 1963 வரை திராவிட நாடு கோரிக்கையை வற்புறுத்தி வந்தது கழகம். ஆதரவு நாள்தோறும் வளர்ந்த வண்ணமாக இருந்தது.

1950 முதல் 2001 வரை நடந்த போராட்டங்களில் கழகத்தினர் பலர் தமது இன்னுயிரை இழந்தனர். அவர்களின் பட்டியல் மிகப் பெரியது. கழக பவளவிழாவின் போது அவ் வீரர்களை நினைவு கூருவோம். அவர்களுக்கு கண்ணீரைக் காணிக்கையாக்கி வீர வணக்கம் செலுத்துவோம்.

1962 -பொதுத் தேர்தலைக் கழகம் சந்தித்தது. சட்டமன்ற - நாடாளுமன்ற நுழைவில் முன் நகர்வை உருவாக்கி வெற்றி முரசைக் கொட்டியது. சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை முறையே 50, 7 என்று உயர்ந்தது.

ஆட்சியில் இருந்தோர்க்கு இது எச்சரிக்கை ஆயிற்று. கழகத்தைத் தடை செய்ய கன்னியாகுமரியில் செயற்குழுக் கூட்டித் தீர்மானித்தனர். அதை அவர்களின் தலைமைக்குப் பரிந்துரைத்தனர்.

1961 இல் தி.மு.க. முதல் பிளவைச் சந்தித்தது. 1962 முதல் 1966 வரை தி.மு.கழகம் செயலாற்றிய வேகம் அலகிட முடியாதது ஆயிற்று. தமிழகம் எங்கும் கழகத்தின் 4 ஆம் மாவட்ட மாநாடுகள் நடந்தன, இவை விருகம்பாக்கம் 4-ஆவது மாநில மாநாட்டை நோக்கி நகர்ந்தன.




1962-ஆம் ஆண்டு தேர்தலில் அறிஞர் அண்ணாவின் தோல்வி, ஒரு பின்னடைவில் முன்னேற்றமான கழகத்தின் எழுச்சி நடையாயிற்று. தி.மு.க.வின் மாநிலங்களவையின் உறுப்பினரானார் அண்ணா. மாநிலங்கள் அவையில் தி.மு.க.வின் முதல் உறுப்பினர் அண்ணாதான்.

தி.மு.க.வை தடை செய்ய சட்டம் தயார் ஆனது. அண்ணா பிரிவினையைக் கைவிட்டார். கழகச் சட்டத்திட்டத்தில் திருத்தம் செய்தார். தொடர்ந்தார்.

கலைஞர் தலைமையில் இந்தி எதிர்ப்புப் போராட்டக் குழு, சட்ட எரிப்பு, மறியல் எனப் போராட்ட பட்டியல். இரு வகை போராட்ட நிலையினரும் ஐவர் அணியினர் ஆவர். இதில் ஈடுபட்ட தோழர்கள் அண்ணா உட்பட 6 மாதங்கள் முதல் மூன்றாண்டுகள் வரை தண்டிக்கப் பட்டனர்.

**க.திருநாவுக்கரசு**
திராவிட இயக்க ஆய்வாளர்



கலைஞரும் முரசொலி மாறனும் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர். தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்பு 4ஆம் கட்டப் போராட்டம், உள்நாட்டுப் போர் போல் காட்சியளித்தது. தி.மு.கழகம் களத்தில் நின்றது. துப்பாக்கிச் சூடுகள் நடந்தன. நூற்றுக்கணக்கானோர் இறந்தனர்.

இந்நிலையிலும் கலைஞர் தேர்தல் நிதி வசூலித்துக் கொண்டு இருந்தார். கொடி விற்பனை முதல் கூட்டத்தில் பங்கேற்க ரூ.500 எனப் பெற்று நிதிகளைப் பெருக்கினார். காரிலேயே படுத்துக் கொண்டு சுற்றுப் பயணம் செய்து அவருக்கு முதுகில் புண் ஏற்பட்டுவிட்டது. இருப்பினும் எல்லாப் பணிகளும் அவர் பொறுப்பேற்று நடத்தினார்.

**விருகம்பாக்கம் அப்போது சென்னையின் புறநகர்ப் பகுதியாக இருந்தது. அங்கேதான் கழகத்தின் 4 ஆவது மாநில மாநாடு நடைபெற்றது. சென்னையிலிருந்து ஊர்வலம் மாநாட்டு திடலை அடைய ஊர்ந்தது. ஊர்வலத்தின் தலை மாநாட்டுத் திடலிலும் வால் மன்றோ சிலையிலேயே நீண்ட நேரம் இருந்தது. அவ்வளவு கூட்டம்.**

**அப்போது இந்தக் கட்டுரையாளர் தொண்டர் படையில் பணியாற்றினார். ஏராளமான சைக்கிள்கள் வரிசைப்படுத்தப்பட்டுக் கிடந்தன. இன்னொரு பகுதியில் சைக்கிள்கள் கொட்டி வைத்ததுபோல் கிடந்தன. 1966/டிச.29,30,31, 1967 ஜன.1 ஆகிய நாள்களில் 4ஆம் மாநில மாநாடு சென்னை விருகம்பாக்கத்தில் நடைபெற்றது. சென்னையில் நடைபெற்ற தி.மு.க.வின் மாபெரும் மாநாடு இது. இதற்குப் பிறகு தி.மு.க. மாநாடு நடத்த சென்னையிலும் புறநகர்ப் பகுதியிலும் இடம் இல்லாமல் போயிற்று.**

**இம்மாநாட்டில் தி.மு.க. பொருளாளர் கலைஞர் ரூ.11 இலட்சம் தேர்தல் நிதியை அறிஞர் அண்ணாவிடம் வழங்கினார். இது அந்நாள்களில் பெருந்தொகையாகும்.**

மாநாட்டு மேடையில் கூட்டணிக் கட்சியினர் பங்கேற்றனர். வேட்பாளர் பட்டியல் அறிவிக்கப்பட்டது. தேர்தல் நடந்தது. தி.மு.க. தனித்த பெரும்பான்மையைப் பெற்றது. அறிஞர் அண்ணா முதல்வரானார். (06.03.1967)

ஓர் அரசியல் கட்சியை - கொள்கை, கோட்பாடு சட்டத்திட்ட விதிகளின் படி முறையாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட நிர்வாகிகள் என அமைப்பு ரீதியாக செயல்பட்டு அறிஞர் அண்ணா அந்த அமைப்பை மக்கள் முன்னிருத்தி தேர்தலில் வெற்றி பெற்று முதல்வராக 18 ஆண்டுகள் ஆயிற்று. அந்த 'ஸ்தாபன கட்டமைப்பு' இன்று வரையும் தி.மு.க.வில் நீடிக்கிறது.

அறிஞர் அண்ணா முதல்வராக 23 மாதங்கள் மட்டுமே பதவியில் இருக்க முடிந்தது. முப்பெரும் சாதனைகளை மட்டுமே நிகழ்த்தினார். அதற்குள் அவர் கொடிய நோயால் பாதிக்கப்பட்டு 03.02.1969 இல் மரணம் அடைந்தார். அது வரையில் அறிஞர் அண்ணா கழகத்தின் பொதுச்செயலாளராகவும் இருந்தார்.

கலைஞர் 09.02.1969 முதல் முதல்வரானார். பின்னர் கழகத் தலைவர் ஆனார். ஆட்சி சகடம் தொடர்ச்சியாய் சுழன்றது. சாதனைகள் தொடர்ந்தன. அப்போது பிரதமராக இருந்தவர் இந்திராகாந்தி. அவருக்கு ஏற்பட்ட 'கட்சி நெருக்கடியால் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டார்.

ஆனால், 1971 ஆம் ஆண்டு தேர்தலைச் சந்திக்க வேண்டிய நிலை உருவாகிவிட்டது. தி.மு.க. இந்திரா காங்கிரசோடு கூட்டணி அமைத்தது. கலைஞர் சட்டமன்றத்தைக் கலைத்து நாடாளுமன்றத்தோடு தேர்தல் நடத்தி மகத்தான வெற்றியை ஈட்டினார். புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். கலைஞரோடு பரப்புரையில் ஈடுபட்டார்.

தி.மு.க. 1967 இல் பெற்ற வெற்றியை விட 1971 ஆம் ஆண்டு தேர்தலில் மாபெரும் வெற்றியைக் கழகம் பெற்றது. காமராசர் - இராஜாஜி மகா கூட்டணி பெருத்த தோல்விக்கு ஆளானது. தி.மு.க. இந்தத் தேர்தலில் வெற்றி பெறாது என்று எதிரிகள் கருதிய கனவு சிதைந்தது.

புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அமையப்போகும் அமைச்சரவையில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக விரும்பினார். நடித்துக் கொண்டே அமைச்சராக இருப்பதற்கு வாய்ப்பில்லை, நடிப்புத் தொழிலை விட்டால் அமைச்சராகலாம் எனக் கலைஞர் மறுமொழி சொன்னார். இதற்கு எம்.ஜி.ஆர். உடன்படவில்லை.

1972 அக்டோபர் 8, 10 தேதிகளில் கழகப் பொறுப்புகளில் உள்ள அனைவரும் சொத்துக் கணக்கு காட்ட வேண்டும் என்று திருக்கழுக்குன்றத்திலும் சென்னையிலும் எம்.ஜி.ஆர். பேசினார். இது அக்டோபர் 11-ஆம் தேதி எல்லா ஏடுகளிலும் வந்தது.

இவ்விவகாரத்தின் தொடர்ச்சி அ.தி.மு.க. தோன்றக் காரணமாயிற்று, இதனால் ஏற்பட்ட அனைத்துப் பாதிப்புகளையும் தி.மு.க. எதிர்கொண்டது. கலைஞர் எதிர்கொண்டார். இயக்கமும் கட்சியும் இயங்கின.

அலகாபாத் நாடாளுமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இருந்த இந்திரா காந்தியின் தேர்தல் செல்லாது என ராஜ் நாராயணன் வழக்குத் தொடர்ந்து இருந்தார். அவ்வழக்கில் அலகாபாத் உயர்நீதிமன்றம் 'இந்திரா தேர்தல் செல்லாது' என 12.06.1975 இல் தீர்ப்புரைத்தது. இத்தீர்ப்பை எதிர்த்து இந்திராகாந்தி மேல் முறையீடு செய்து இருந்தார்.

ஆனால் இந்திராகாந்தியை எதிர்த்து எதிர்க்கட்சிகள் போராடின. இதனால் இந்திராகாந்தி, 'உள்நாட்டுக் குழப்பங்களால் இந்தியாவின் பாதுகாப்புக்குத் தீங்கு ஏற்படும் என்று கருதுவதால் நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்படுகிறது' என்று அவர் அறிவித்தார்.

1975-ஆம் ஆண்டு ஜூன் 25-ஆம் தேதி நெருக்கடி நிலை பிரகடனப் படுத்தப்பட்டது. ஜெயபிரகாஷ் நாராயண், மொரார்ஜி தேசாய், இடதுசாரி தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். நாடெங்கும் ஜனநாயகமற்ற இருண்ட சூழ்நிலை நிலவிற்று.

தமிழ்நாட்டின் முதல்வரான கலைஞர் நெருக்கடி நிலையை வரவேற்கவில்லை. இந்தியாவே ஆடிப்போய் உள்ள சூழ்நிலையில் தி.மு.கழகம் நெருக்கடி காலத்தை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றியது. அதாவது கலைஞர் முன்னின்று நிறைவேற்றினார்.

பெரியார் திடலில் பாசிச எதிர்ப்பு மாநாடு நடந்தது. இ.எம்.எஸ்.நம்பூதிரி பாட், 'தமிழ்நாட்டில்தான் சுதந்திரக் காற்றை நுகர முடிகிறது' என்று அம் மாநாட்டில் பேசினார். கழகத்தினர் திரளாக மாநாட்டில் பங்கேற்றனர்.

கோவையில் 1975/டிசம்பர் கடைசியில் தி.மு.க.வின் 5-ஆவது மாநில மாநாடு, கோவை குலுங்கியது. நெருக்கடி நிலையின் சுவடே தெரியவில்லை. தமிழ்நாடே அப்படித்தான் இருந்தது. அப்போது இந்திராகாந்தி, 'இந்தியாவில் தமிழ்நாடு தீவுபோல் காட்சியளிக்கிறது' என்றார். இதன் விளைவு என்னவாயிற்று?

தொடர்ச்சி… நாளை

## தி.மு.க. பவள விழா காஞ்சிபுரத்தில் இன்று நடக்கிறது

# திருப்பத்தூர் மாவட்டக் கழகம் சார்பில் பெருந்திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிக்கை!

*திருப்பத்தூர், செப். 28 -*

திருப்பத்தூர் மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தி.மு.க. பவள விழாவை முன்னிட்டு இன்று (28.09.2024 - சனிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி திடலில் தி.மு.க. கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் மாபெரும் பொதுக்கூட்டத்தில் முதல்வர் - கழக



தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்த உள்ளார்.

அதுசமயம் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு,

பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், நகர மன்ற தலைவர்கள், ஒன்றிய குழுத் தலைவர்கள், பேரூராட்சி தலைவர்கள் மற்றும் துணை தலைவர்கள், மாவட்ட கவுன்சிலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், வார்டு, கிளைக்கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. சார்பில் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளரும் ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.



வேலூர் மாவட்டம் காட்பாடி SDAT உள் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்று வரும் முதலமைச்சர் கோப்பைக்கான கேரம் போட்டியினை மேனாள் உலகின் நம்பர் 2 தரவரிசை வீரரும், SAARC, ASIAN சாம்னுபியனும், இந்தியாவின் நம்பர் ஒன் வீரரான ஆரோக்கியராஜ் போட்டியினை துவக்கி வைத்தார். பின்னர் விளையாட்டு வீரர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது, இந்நிகழ்ச்சியின் போது வேலூர் மாநகராட்சியின் துணை ஆணையர் த.சௌந்தரராஜன், மாவட்ட துணை ஆட்சியர் சையது முனிர் மற்றும் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் பாலமுருகன் உடன் இருந்தனர். இப்போட்டியில் ஏராளமான ஆண், பெண் அரசு ஊழியர்கள் கலந்து கொண்டனர்.